**சிறுதானியங்கள் ரெடிமிக்ஸ் தயாரிப்பில் தொழில் முனைவோர் - ஒரு வெற்றிக்கதை**

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் வட்டாரம், கதிர்நாயக்கனஹள்ளி கிராமத்தைச் சார்ந்த பெண் விவசாயியான செல்வி.செ. இராமகாந்தம், த/பெ. செட்டியப்பன் அடிப்படையில் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர். விவசாயத்தில் இருந்து வருமானம் மட்டும் தான் இவர்களின் வாழ்வாதாரம் ஆகும். இராகி, சோளம், திணை, சாமை மற்றும் பயறுவகை பயிர்களை தனது சொந்த நிலத்தில் பயிர் செய்து உள்ளூர் சந்தையில் விற்பனை செய்து வந்தார்.

பண்ணை மகளிராக இராமகாந்தம் வேளாண் அறிவியல் நிலையத்தின் அனைத்து செயல்பாடுகளிலும் பங்கு கொளவார். இச்சூழ்நிலையில் வேளாண் அறிவியல் நிலையத்தில் ஒரு மாத கால பயிற்சியாக சிறுதானியங்களில் மதிப்புக்கூட்டுதல் என்ற தலைப்பில் தொழில் முனைவோரை உருவாக்கும் பயிற்சி திட்டமிடப்பட்டு விருப்பமுள்ள விவசாயிகள் பெண்கள் தேர்வு செய்யப்பட்டனர். ஏற்கெனவே தமது வருவாயை அதிகரிக்க வேண்டும் என்ற ஆர்வமுள்ள இராமகாந்தம் மற்றும் அவரது சகோதரி செல்வி. லட்சுமிகாந்தம் இருவரும் இப்பயிற்சிக்கு விண்ணப்பம் செய்தார்கள். பிறகு நேர்க்காணல் மூலம் இப்பயிற்சியில் பங்கு பெற இருவரும் முறையாக தேர்வு செய்யப்பட்டார்கள்.

இந்த பயிற்சியின் போது சிறுதானியங்களை பயன்படுத்தி தயாரிக்கின்ற 30 க்கும் மேற்பட்ட உணவுகளை பற்றிய குறிப்புகளும் செயல்முறை விளக்கங்களும் அளிக்கப்பட்டது. சிறுதானிய அடை மிக்ஸ், ஹெல்த் மிக்ஸ், புட்டு மிக்ஸ், முறுக்கு மிக்ஸ், களி மிக்ஸ் போன்ற உடனடி உணவுகளும் அடுமனைப் பொருட்களான குக்கீஸ், கப் கேக் மற்றும் பிரெட் போன்ற உணவுகளும் மேலும் சிறுதானிய தின்பண்டங்களான முறுக்கு, சீவல மற்றும் லட்டு தயாரித்தல் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியின் வழியாக அவர் அணைத்து சிறுதானிய உணவுகளை செய்வதற்கு கற்றுக் கொண்டதோடு மட்டுமில்லாமல் சிறுதானிய உணவுகளின் ஆரோக்கியம் பயன்பாடு மற்றும் நலன்கள் குறித்தும் தெளிவான அறிவைப் பெற்றுக் கொண்டார். மேலும் இப்பயிற்சியில் சிறுதானிங்களில் மதிப்புக்கூட்டப்பட்ட உணவு பொருட்களின் வகைகள் மற்றும் அவற்றை தயார் செய்யும் முறைகள், தொழில் முனைவோராக உருவாவதற்கான தகுதிகள், தொழில் முனைவோராக மாறுவதற்கு உறுதுணையாக உள்ள பல்வேறு வகையான துறைகள் மற்றும் அவற்றின் முக்கிய செயல்பாடுகள், சிறுதொழில்கள் தொடங்குதல், கணக்கு பதிவேடு பராமரிப்பு ஆகியவற்றினை பற்றி விரிவாக விளக்கப்பட்டது.

இதில் பயிற்சி பெற்ற பின் சகோதரிகள் இருவரும் சுயதொழில் ஆரம்பிக்க ஆர்வம் கொண்டு பயிற்சிக்கு பிறகு மேலும் பல சந்தேகங்களை பாப்பாரபப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகளிடம் கேட்டு தெளிவு பெற்றார். இதன் பிறகு இவரகள் மட்டும் தொழில் ஆரம்பிக்காமல் தங்களுடைய குழுவான மங்கா மகளிர் குழுவில் உள்ள 20 உறுப்பினர்களையும் சேர்த்து சுயதொழில் செய்யும் எண்ணத்தில் பாப்பாரபப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தை அனுகினார். இக்குழுவின் செயல்பாடுகளை ஆய்வு செய்த பின் இக்குழுவிற்கு தமிழ்நாடுவேளாண்மை பல்கலைக்கழகத்தின் விரிவாக்ககல்வி இயக்ககத்தின் மூலம் நடத்தப்படும் தீவிர சிறுதானிய சாகுபடி மூலம் ஊட்டச்சத்தினை உறுதிப்படுத்தும் திட்டம் (INSIMP) மூலம் முன் பதப்படுத்துத்தலுக்கான இயந்திரங்கள் வழங்கப்பட்டன. கல் மற்றும் தூசிநீக்கும் இயந்திரம், உமிநிக்கும் இயந்திரம், மாவு அரைக்கும் இயந்திரம், மாவு பிசையும்

இயந்திரம், துணிப்பைகளை பேக்கேஜ் செய்யும் இயந்திரம் மற்றும் பாலிதீன் பைகளை பேக்கேஜ் செய்யும் இயந்திரம ஆகியவை இக்குழுவிற்கு வழங்கப்பட்டது.

சிறுதானியங்களிலிருந்து மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களான சிறுதானியசத்துமாவ மிக்ஸ், கம்பு அடை மிக்ஸ், இராகி பணியாரம் மிக்ஸ், பலதானிய அடை மிக்ஸ், புட்டு மிக்ஸ், தோசை மிக்ஸ், பல விதமான சிறுதானிய பிஸ்கட், இராகி முறுக்கு, மற்றும் சாமை தோசை மிக்ஸ், போன்றவற்றை தயார் செய்து "மங்கா ரெடிமிக்ஸ் " என்ற பெயரில் விற்பனை செய்து வருகின்றனா். மேலும் இவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்படும் கண்காட்சிகளில் விற்பனை மையம் அமைத்து விற்பனை செய்து வருகின்றனர். இவை மட்டுமல்லாமல் தருமபுரி மாவட்ட அரசுஅலுவலர்கள், அரசு சார்பில் நடக்கும் ஆய்வு நிகழ்ச்சிகள், தருமபுரி மாவட்டத்திலுள்ள மளிகை கடைகள், திண்பண்ட கடைகள் ஆகிய இடங்களில் இப்பொருட்களை விற்பனை செய்து தங்கள் வியாபாரத்தை விரிவுபடுத்தியுள்ளனர். தங்கள் நிலத்தில் விளையும் சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகளை பயன்படுத்தி மேற்கூறிய உணவு வகைகளை தயாரிப்பது இக்குழுவின் முக்கிய அம்சமாகும். மேலும் இவர்கள் மாதத்திற்கு குறைந்தது 10,000 முதல் 12,000 வரை இலாபம் சம்பாதிக்கின்றனர். கிடைக்கும் இலாபத்தை அனைவரும் பகிர்ந்து கொள்கின்றனா். இந்த பொருளாதார முன்னேற்றத்திற்கு காரணம் தமிழ்நாடு வேளாண்மை பல்கழைக்கழகத்தின் விரிவாக்ககல்வி இயக்ககம் மற்றும் பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் பங்களிப்பு என்று கூறுகின்றனர். மேலும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கிராமத்தில் இருந்து தாங்கள் விளைவித்த விவசாயப் பொருட்களுக்கு தாங்களே விலை நிர்ணயம் செய்து மதிப்புக்கூட்டி விற்பதின் மூலம் சமுதாயத்தில் தங்களுக்கென்று ஒரு பெரிய இடத்தைப் பிடித்த இவா்கள், இவா்களை போன்ற மற்ற மகளிருக்கும் ஒரு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்வாரகள் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை

பெயர் மற்றும் முகவரி : செல்வி.செ. இராமகாந்தம்
செல்வி.செ. லட்சுமிகாந்தம
த/பெ. செட்டியப்பன்
கதிா்நாயக்கனஹள்ளி
மொரப்பூர் தாலூக்கா
தருமபுரி மாவட்டம்
தொலைபேசி எண் - 9488747563



